# தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர் – 613 010,

**பல்கலைக்கழக விடுதிகளுக்கு மூன்று வேளை உணவு வழங்குவதற்கு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

தமிழ்ப் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மற்றும் மாணவியர்களுக்கு ஓராண்டு காலத்திற்கு மூன்று வேளை உணவு வழங்குவதற்கு தகுதி வாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து / அமைப்புகளிடமிருந்து இரட்டை உறை (Double cover System) முறையில் மகளிர் மற்றும் ஆடவர் விடுதிகளுக்கு தனித்தனியே மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கும் நாள் | 12.06.2024 முதல் 11.07.2024 வரை அலுவலக நாள் மற்றும் நேரங்களில் மட்டும் |
| 2. | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் கொடுக்க கடைசி நாள் மற்றும் நேரம் | 11.07.2024 வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணிவரை |
| 3. | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 12.07.2024 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி மகளிர் விடுதி / 3.15 மணி ஆடவர் விடுதி |
| 4. | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை | ரூ.1000/- (திரும்ப பெறத்தக்கதல்ல) |

ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://www.tamiluniversity.ac.in/ என்ற இணைய தளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணைய தளத்திலிருந்து பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுப்பும் போது விண்ணப்பப் படிவத்தின் விலை ரூ.1000/-க்கும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை ரூ.25,000/-க்கும் தனித்தனியாக The Warden, Gents Hostel, Tamil University, Thanjavur – 613 010/ The Warden, Women's Hostel, Tamil University, Thanjavur – 613 010 என்ற பெயருக்கு வரைவோலை (D.D) எடுத்து படிவத்துடன் இணைத்து ஒப்பந்தப்புள்ளி உறையின்மீது ஆடவர் விடுதி மற்றும் மகளிர் விடுதி என்று குறிப்பிடபட்ட உறைகள் 11.07.2024 வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர் – 613 010,

**பல்கலைக்கழக விடுதிகளுக்கு மூன்று வேளை உணவு வழங்குவதற்கு**

**ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகள்**

**ஒப்பந்தப்புள்ளி படிவம் விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்.**

1. ஒப்பந்தத்திற்கான விண்ணப்பதாரர் தனியார் நிறுவனம் ஆகவோ பொது நிறுவனம் ஆகவோ அல்லது கூட்டு நிறுவனமாகவோ (Firm) இருக்கலாம். வருடம் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் ரூபாய் 5 லட்சத்திற்குக் குறைவில்லாமல் வரவு – செலவு செய்ததற்குச் சான்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு இணைக்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் தனியார் நிறுவனங்கள் அரசு அங்கீகாரம் பெற்று பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். 3 வருடத்திற்கு முன் அனுபவ சான்று இணைக்கப்படவேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தரக் கணக்கு எண் அட்டை (Pan Card) நகல் இணைக்கவேண்டும்.
4. ஏற்கெனவே ஒப்பந்தக்காரராக இருந்து நிபந்தனைகளின்படி நடக்க தவறியவர்கள் அவர்களது ரத்த உறவினர்கள், 21 வயது பூர்த்தி அடையாதவர்கள், தமிழ்ப் பல்கலைக்கழக பணியாளர்கள் அவர்களது ரத்த சம்பந்தமான நெருங்கிய உறவினர்கள் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் மீது வழக்கு தொடர்ந்தவர்கள் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளி அளிக்க தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.
5. ஒப்பந்தப்புள்ளிதாரர் ஆடவர் விடுதிகளுக்கு தனியாகவும் மகளிர் விடுதிகளுக்கு தனியாகவும் விண்ணப்பிக்க வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி திறப்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகள்.**

1. முதல் உறையில் ஒப்பந்தக்காரரது தகுதிகாண் விவரங்களை வைத்து மூடி முத்திரையிட்டும் (Technical bid) இரண்டாவது உறையில் விலை விகிதம் குறிப்பிட்டும் EMD – க்கான வரைவோலையுடனும், மூடி முத்திரையிட்டும் (Financial bid) மூன்றாவது உறையில் இந்த இரண்டு உறைகளையும் வைத்து மூடி முத்திரையிட வேண்டும். ஒவ்வொரு உறையின் மீதும் தகுதிகாண் படிவம் மற்றும் விலை விகித படிவம் எனத்தனித்தனியாக எழுதப்பட்டு மூன்றாவது உறையில் மேற்கண்ட இரண்டு உரைகளையும் வைக்கவேண்டும்.

2. இரு உறைகள் முறையில் நடத்தப்படும் ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி திறப்பன்று தகுதிகாண் படிவம் உள்ள உறை (Technical bid) முதலில் திறக்கப்படும். அதனைத் தொடர்ந்து தகுதியுடைய ஒப்பந்தக்காரரின் விலை விகித படிவம் (Financial bid) திறக்கப்படும்.
3. ஒப்பந்தப்புள்ளி காப்புத் தொகை செலுத்தியதற்கான இரசீது வங்கி வரைவோலை மற்றும் அசல் சான்றிதழ் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், தொகையில் அடித்தல், திருத்தல் செய்யப்பட்டு இருந்தாலும், கையொப்பமிடாது இருந்தாலும், ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
4. ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினைப் பக்க வாரியாக (Page) அட்டவணையிட்டு பொருளடகத்தில் (Index) தெரிவிக்கவேண்டும்.
5. நிறுவனங்களின் விபரங்கள் அதிகமாக இருப்பின் தனி இணைப்பாக கொடுக்கவேண்டும்.
6. விண்ணப்பதாரர் கடந்த 2 வருடங்களில் எந்த ஒரு வாடிக்கையாளராலும் தண்டிக்கப்படவோ அல்லது தன்மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவோ இல்லை என்பதற்கான பிரமாணப்பத்திரம் ஒன்றை வழங்க வேண்டும்.
7. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனம் குறிப்பிடும் விலைப்புள்ளி தொகைக்கு விரிவாக குறிப்பு (Break up Details) ஒன்றை இணைக்கவேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த சதவீதம் நாளொன்றுக்கு உணவுக்கட்டணமாக குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் L1 என முடிவு செய்யப்பட்டு, விலைக்குறைப்பிற்கு பின்னர் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்படும். (The tenderer who has quoted lowest percentage of Food charges will be declared as L1 and called for rate negotiations)
9. ஒப்பந்தப்புள்ளியில் ஒரே விலைப்புள்ளி இருப்பின் நிறுவனதாரர் / மற்றும் பணியாளர்களின் அனுபவத்தின் அடிப்படையில் L1 என முடிவு செய்யப்படும்.
10. எந்தவொரு காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது ஒப்பந்தப்புள்ளியை நிறுத்தி வைக்கவோ, தமிழ்ப் பல்கலைக்கழக நிருவாகத்துக்கு அதிகாரம் உண்டு.
11. ஒப்பந்தப்புள்ளி தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்ட விதிகளுக்கும் பல்கலைக்கழக நிருவாகத்தின் ரத்து அங்கீகாரத்திற்கும் உட்பட்டது ஆகும்.

**ஒப்பந்தம் அளித்தப் பிறகு நிறுவனத்தாருக்கான நிபந்தனைகள்.**

1. ஒப்பந்தக்காரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி தமிழ்ப் பல்கலைக்கழக நிருவாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், ஏற்று கொண்ட நாளிலிருந்து 7 தினங்களுக்குள் தனது சொந்த செலவில்

உடன் ரூ.100/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை ஏற்று ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வேறு பெயர்களுக்கு மாற்றத்தக்கதல்ல
3. நிபந்தனைகளை மீறினாலோ, பின்பற்ற தவறினாலோ அல்லது பணிகளைச் சரிவர செய்யா விட்டாலோ, ஒப்பந்தக்காரர் நிபந்தனைப்படி நடக்கவில்லை என பல்கலைக்கழக நிருவாகம் கருதினாலும், ஒப்பந்தக்காரருக்கு எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தத்தை ரத்து செய்திட நிருவாகத்திற்கு அதிகாரம் உண்டு.
4. விண்ணப்பத்தாரரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் பொய்யானவை என தெரிய வருமானால் முன்வைப்புத் தொகை திருப்பித்தரமாட்டாது.
5. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதை பல்கலைக்கழக நிருவாகம் சட்டப்படி அனுமதிக்காது.
6. சமையல் நிறுவனத்தின் பணி திருப்திகரமாக இல்லையெனில், ஒப்பந்தத்தை இரத்து செய்ய பல்கலைக்கழக நிருவாகத்திற்குப் பூரண உரிமையுண்டு. பணியில் கவனக்குறைவாக இருக்கும் சமையலர் மற்றும் உதவி சமையலர் நடத்தையில் நிருவாகத்தால் குறை கண்டறியப் படுமானால் அவர்களை இப்பல்கலைக்கழக சமையல் மற்றும் உதவி சமையலர் பணியிலிருந்து ஒப்பந்த நிறுவனம் நீக்கிவிட வேண்டும். அவ்வாறு நீக்கப்பட்ட பணியாளர்களுக்குப் பதிலாக வேறுபணியாளரை உடன் பணி அமர்த்திட வேண்டும்.
7. ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தாருக்கும் பல்கலைக்கழகம் சார்பாக வழங்கப்படும் தளவாடப் பொருட்களை நல்ல முறையில் பராமரித்து ஒப்பந்த காலம் முடியும்பொழுது ஒப்பந்தத்தாரர் பல்கலைக்கழகத்திடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறு மீள வரப்பெறாத தளவாடப் பொருட்களுக்கு வைப்புத்தொகையில் பிடித்தம் செய்யப்படும்.
8. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை மீறினால் இப்பணிக்கான ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். காப்புத் தொகையாக செலுத்திய தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.
9. ஒப்பந்தக்காரரால் நியமிக்கப்படும் உணவு வழங்கும் பட்டியலில் தமிழ்ப் பல்கலைக்கழக, விடுதிக்காப்பாளர் அவர்களது சான்றின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் உணவு வழங்கியதற்கு தொகை வசூலிக்கவேண்டும்.

**பல்கலைக்கழக விடுதிகளுக்கு மூன்று வேளை உணவு வழங்கும் நிறுவனத்திற்கு**

**ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகள்**

1. ஒப்பந்ததாரரால் வழங்கப்படும் மூன்று வேளை உணவு மற்றும் காலை தேநீர், மாலை தேநீருடன் பலகாரம் இவைகள் தரமானதாக இருக்கவேண்டும்.
2. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உணவு வகைகளை பட்டியலின்படி சுவையாக உணவு தயாரித்து காலை, நண்பகல், இரவு மூன்று வேளையும் உரிய நேரத்தில் மாணவர்களுக்கு வழங்கவேண்டும். மாணவ மாணவியர் உடல் நலன் பேணி காக்கும் வகையில் உணவு வழங்கவேண்டும். தவறினால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு வைப்புத் தொகை ( Deposit Amount) பறிமுதல் செய்யப்படும்.
3. விடுதியிலுள்ள தளவாடப் பொருட்கள் (இணைப்பு) தற்காலிகமாக விடுதிப் பயன்பாட்டிற்கு வழங்கப்படுகின்றன. இப்பொருட்களில் ஏதாவது பழுது ஏற்பட்டால் தாங்களே சரிசெய்து கொள்ள வேண்டும்.
4. விடுதியைச் சுகாதாரத்துடன் பராமரிப்பது தங்களது கடமையாகும். நாள்தோறும் மூன்று முறையாவது உரிய கிருமி நாசினியைக் கொண்டு சுத்தம் செய்வது தங்கள் பொறுப்பாகும்.
5. விடுதியின் செயல்பாடுகள் ஒவ்வொரு மாதமும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.
6. விடுதியில் வழங்கப்படும் அனைத்து உணவு வகைகள் தரமானதாக இருக்கவேண்டும். உணவுத் தரம் குறைந்தாலோ அல்லது நிபந்தனைப்படி நடக்கவில்லையென நிர்வாகம் கருதினால் எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தத்தை இரத்து செய்ய நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு.
7. உணவுப் பாதுகாப்பு அலுவலகத்தில் உரிய சான்றிதழ் பெற வேண்டியது தங்களது பொறுப்பாகும். சான்றிதழைப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.
8. பல்கலைக்கழகம் சார்பாக வழங்கப்படும் தளவாடப் பொருட்களை நல்ல முறையில் பராமரித்து ஒப்பந்தக் காலம் முடியும் போது பல்கலைக் கழகத்திடம் மீள ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு மீள வரப்பெறாத தளவாடப் பொருட்களுக்கு வைப்புத் தொகை ரூ.25,000/-ல் பிடித்தம் செய்யப்படும்.
9. தினந்தோறும் மூன்று வேளை உணவு பரிமாறுவதும் வருகைப் பதிவேட்டினைப் பராமரிப்பதும் தங்களது பணியாகும். மாணவர்களுக்கு கூடுதல் உணவுத் தேவை ஏற்படின் அதற்கான உணவு ரூ.---------- டோக்கன் கொடுப்பது தங்களது பொறுப்பாகும்.
10. சமையல் பணியில் இருக்கும் பணியாளர்கள் பல்கலைக்கழக பணியாளர்களிடம் மற்றும் மாணவ, மாணவியிர்களிடம் கண்ணியமான முறையில் நடந்துக் கொள்ளப் பயிற்சி அளிக்க வேண்டியது ஒப்பந்த நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பாகும்.

11. மூன்றுவேளை உணவு தயாரித்து வழங்கும் பணியாளர்கள் பல்கலைக்கழக நிருவாகம் நிர்ணயிக்கும், நிறத்தில் ஒரே மாதிரியான அடையாள அட்டையும், சீருடையும் அணிந்து பணிபுரிய வேண்டும். சலவைப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

குறிப்பு

- நியாயமான வேறு நிபந்தனைகள் இருந்தால் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு நேரத்தில் தெரிவிக்கப்படும்.

பதிவாளர்(பொ.)

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.